NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 25 February 2015





போட்டிகளில் விறுவிறுப்பாகப் பங்கேற்ற இளையர் குழுக்கள்.

# நட்புறவை வளர்த்த விளையாட்டுப் போட்டிகள்

ம. திவ்யதர்ஷினி,
வி. அருள் ஓஸ்வின்

இளையர்களிடையே நட்புறவையும் நேர்மையான போட்டித்தன்மையையும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் ஊக்குவிக்கும் நோக்கில் 15 பெண்கள் பந்து குழுக்கள், 32 ஆடவர் குழுக்கள், முன்னாள் சிங்கப்பூர் பல்கலைக்கழக மாணவர்கள், மீடியாகார்ப் இந்திய ஒலிவழியின் படைப்பாளர் குழு ஆகியவை பங்கேற்ற இவ்வாண்டுக்கான 'ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா' நிகழ்ச்சி கோலாகலமாக நடந்தேறியது.

சிங்கப்பூரில் உள்ள உயர்கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்களும் விளையாட்டை நேசிக்கும் இளையர் குழுக்களுமாக கிட்டத்தட்ட 500 இளையர்களின் பங்கேற்பில் 21வது ஆண்டாக நடந்த இப்போட்டிகள் சிங்கப்பூர் தேசியப் பலகலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

காலை 9 மணிக்குத் தொடங்கிய விளையாட்டுப் போட்டிகளில் இளையர்கள் விறுவிறுப்புடன் மோதிக்கொண்டனர். காற்பந்தை நேசிக்கும் இளையர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய குழுக்களில் ஒன்றான 'கறுப்புக் குதிரை' வெற்றியைத் தட்டிச் சென்றது.

பெண்களிடையே நடந்த 'கேப்டன்ஸ்' பந்து போட்டிகளின் இறுதிச் சுற்றில் சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரியைச் சேர்ந்த இரண்டு குழுக்கள் மோதின. 'ஏடர்ஸ்' பெண்கள் குழு வெற்றிவாகை சூடியது.

நிகழ்ச்சிக்குச் சிறப்புச் சேர்க்க, வசந்தம் தொலைக்காட்சி, ஒலி 96.8 படைப்பாளர்களின் குழுவுடன் சிங்கப்பூர் பலகலைக்கழக மாணவர்களுக்கு இடையே நட்புமுறைக் காற்பந்துப் போட்டியும் இடம்பெற்றது. அதில் 2–0 என்ற கணக்கில் தேசியப் பல்கலைக்கழக மாணவர்கள் வெற்றிவாகை சூடினர். தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை நடத்தும் இதர நிகழ்ச்சிகளான 'சங்கே முழங்கு', சாதனா துணைப்பாட வகுப்புகள் போன்றவற்றைப் பரப்பும் நோக்கில் படைக்கப்பட்ட கூட்டுநடனம் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

"காற்பந்தின் மேல் உள்ள ஆர்வத்தை வெளிக்காட்ட சிறந்த வாய்ப்பாக இது அமைந்தது,'' என ஒரே தேவாலயத்திற்கு செல்லும் நண்பர்களுடன் குழு அமைத்து விளையாடிய ருபன் ஜோர்ஜ் பிரெஸ், 17. பெரும் உற்சாகத்துடன் விளையாடிய நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைகழகப் பெண்கள் குழுவைச் சேர்ந்த காயத்ரி சௌந்தரராஜன், 20, போட்டிகள் மிக கடினமாக இருந்ததாகக் கூறினார்.

"இது எங்களுடைய முதல் குழு விளையாட்டு. மற்ற கல்வி நிலையங்களைச் சேர்ந்த நண்பர்களைக் காணவும் புதிய நட்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் அரிய சந்தர்ப்பமாக இந்த வாய்ப்பு அமைந்தது,'' என்றார் நீஆன் பலதுறைத் தொழிற்கல்லூரியைச் சேர்ந்த பெண்கள் குழுவின் தலைவி குமரேஷ்வரி பாலகிருஷ்ணன், 20.




வெற்றி பெற்ற 'புயல் எஃப்சி' முன்னாள் மாணவர் குழுத் தலைவரிடம் (இடது) கோப்பையை வழங்கும் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் தற்போதைய தலைவர் ம.கணேஷ்குமார். **படங்கள்: திமத்தி டேவிட், தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை**

## பிரேம்குமார் நினைவுக் கோப்பை போட்டி

தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையில் உறுப்பினராக இருந்தபோதே மரணமுற்ற முன்னாள் மாணவர் பிரேம் குமாரின் நினைவாக 2005ஆம் ஆண்டு முதல் 'ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா' நிகழ்ச்சியின் அங்கமாக காற்பந்துப் போட்டி நடத்தப்பட்டு நினைவுக் கோப்பை வழங்கப்படுகிறது.

முன்னாள் தேசியப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தற்போதைய மாணவர்களுக்கும் இடையே நடத்தப்படும் இப்போட்டியில் இவ்வாண்டு 'புயல் எஃப்சி' எனப் பெயரிடப்பட்ட முன்னாள்மாணவர்கள்நினைவுக் கோப்பையை வசப்படுத்தினர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.